இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | |
|---|---|---|
| හින්දු ශිෂ්ටාචාරය I<br>இந்து நாகரிகம் I<br>Hindu Civilization I | 46 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

P.Anush

**1.** திருக்கோயிலில் நிகழும் நித்திய பூசையில் இடம்பெறும் மூன்று பொது அம்சங்களாவன
(1) பூத சுத்தி, ஜபம், கார்த்திகைப் பூசை
(2) தோத்திரம், நிருத்தியம், கலசபூசை
(3) அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை
(4) நைவேத்தியம், கும்பபூசை, சதுர்த்திப்பூசை
(5) தீபாராதனை, அர்ச்சனை, பிரதோஷபூசை

**2.** சாக்த ஆகமங்களுக்குரிய சிறப்புப் பெயர்
(1) சங்கிதை (2) தந்திரங்கள் (3) கிராணம்
(4) பஞ்சராத்திரம் (5) பக்திசூத்திரம்

**3.** சோழர் காலத்தில் ‘தென் திசை மேரு’ என்ற பெயரால் போற்றப்பட்ட கோயில்
(1) ஐராவதேசுவரம் (2) சிதம்பரம்
(3) திரிபுவனேசுவரம் (4) புதுக்கோட்டை மூவர் கோயில்
(5) தஞ்சைப் பெருங்கோயில்

Hinduculture( 2K23_23_24_25 )A/L Admin: 0772350031

**4.** இதிகாசங்கள் பெறும் தனிச்சிறப்பைக் குறிப்பது
(1) சம்ஸ்கிருத மொழியில் அமைந்தமை
(2) இந்துசமய கலைக்களஞ்சியமாகப் போற்றப்பட்டமை
(3) சூதர்களால் ஓதப்பட்ட கதையின் தொகுதியாக அமைந்தமை
(4) விஷ்ணுவின் தெய்விகச் சிறப்பு போற்றப்பட்டமை
(5) பல்வேறு இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டமை

**5.** ‘பிருகத் சம்ஹிதை’ என்ற சோதிட நூலின் ஆசிரியர்
(1) ஆரியபட்டர் (2) பிரமகுப்தர் (3) கார்க்கி
(4) வராகமிகிரர் (5) பாஸ்கராச்சாரியார்

**6.** இந்து அறவியல் மரபில் “ஒரு சமயநெறியின் வளர்ச்சிப் பாதை என்பது சத்தியத்தின் பாதை” எனக் குறிப்பிட்டது
(1) பகவத்கீதை (2) முண்டக உபநிடதம்
(3) சுக்கிர நீதி (4) சைவசமய சிந்தாமணி
(5) இராமகிருஷ்ண விஜயம்

7. இராமாயணத்தை வடமொழியில் இயற்றிய ஆதிகவி
(1) வியாசர் (2) பரத்துவாஜர் (3) வான்மீகி
(4) யாக்ஞவல்கியர் (5) துளசிதாசர்

8. மங்களாசனம் பெற்ற திவ்விய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்
(1) ஆழ்வார்கள் (2) நாயன்மார்கள்
(3) மெய்கண்ட சந்தானாச்சாரியர்கள் (4) சித்தர்கள்
(5) சிவாச்சாரியர்கள்

9. தர்மசாஸ்திரங்கள் குறிப்பிடும் வானப்பிரஸ்த நிலையாவது
(1) குருவாக விளங்கும் நிலை
(2) முற்றுந் துறந்த நிலை
(3) இல்லறத்தில் ஈடுபடும் நிலை
(4) காட்டையடைந்து ஆன்மீக வாழ்வுக்கு ஆயத்தமாகும் நிலை
(5) மாணவ நிலை

10. அர்த்தசாஸ்திரம் என்ற நூலில் சிறப்பாக விளக்கப்படுவது
(1) திருக்கோயிற் கட்டடக்கலை
(2) இந்து மரபில் யோகம், தியானம்
(3) இந்து அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்
(4) இந்து நுண்கலைகள்
(5) வடநாட்டு பக்தி மரபு

11. இந்து தத்துவ வளர்ச்சியில் குறிப்பாகத் தர்க்க முறைகளுக்கான திறவுகோலாகப் போற்றப்படும் நூல்
(1) ஆரணியகம் (2) சிரௌதசூத்திரம் (3) சுக்கிர நீதி
(4) விஷ்ணு புராணம் (5) பிரம்மசூத்திரம்

12. “என்னை இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக” என்ற உபாசனைப் பாடல் இடம்பெறும் உபநிடதம்
(1) கேன உபநிடதம் (2) பிருகதாரண்யக உபநிடதம் (3) ஈசோபநிடதம்
(4) கடோபநிடதம் (5) ஐதரேய உபநிடதம்

13. “கயிறு பாம்பாகத் தோன்றும்” என்ற உதாரணத்தைக் குறிப்பிடும் வாதம்
(1) பிரதிபிம்ப வாதம் (2) அவச்சேத வாதம் (3) விவர்த்த வாதம்
(4) சூனிய வாதம் (5) கணபங்க வாதம்

14. விஜயநகர ஆட்சிக்காலத்தில் ‘விஷ்ணுசித்தீயம்’ என்ற நூலை எழுதிய மன்னன்
(1) முதலாம் புக்கன் (2) அச்சுதராயர் (3) இராமராயர்
(4) கிருஷ்ண தேவராயர் (5) கரிகரன்

15. ‘மெய்ஞ்ஞான தீபம்’ என்ற நூலின் ஆசிரியராக விளங்கியவர்
(1) விபுலானந்தர் (2) இராஜாராம் மோகன்ராய்
(3) அருணாசல தேசிகர் (4) ஞானப்பிரகாச சுவாமிகள்
(5) தயானந்த சரஸ்வதி

16. ‘கடாரம்’ என்று இந்தியக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் நாடு
(1) இலங்கை (2) அந்தமான் தீவுகள் (3) சிங்கப்பூர்
(4) யாவா (5) மலேசியா

17. தட்சசீல நகரத்துடன் தொடர்புடைய மருத்துவப் பேரறிஞர்
(1) சுவாமி விவேகானந்தர் (2) விசுவாமித்திரர்
(3) சரகர் (4) அன்னிபெசன்ற் அம்மையார்
(5) துளசிதாசர்

Hindu culture(2K22_23_24_25)A/L Admin: 0772959091

[பக். 3 ஐப் பார்க்க

**18.** சிவாகமங்களில் கிரியாபாதம் குறிப்பிடும் 'கர்ஷணம்' என்பது
(1) ஆலயத்தில் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்தல்
(2) ஆலயத்தில் வருடமொருமுறை நடைபெறும் திருவிழா
(3) ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்தல்
(4) ஆலயக் கிரியைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்திப்பதற்கு ஆற்றப்படும் கிரியை
(5) கல்லில் விக்கிரகங்களை உருவாக்குதல்

**19.** அம்பிகையின் தெய்விகப் பெருமைகளைப் போற்றும் 'சௌந்தர்யலகரி' என்ற நூலைப் பாடியவர்
(1) ஸ்ரீ இராமானுஜர் (2) சங்கரர் (3) பாதராயணர்
(4) கௌடபாதர் (5) மத்துவர்

**20.** பிரம்மசூத்திரத்திற்கு நீலகண்ட சிவாச்சாரியார் எழுதிய நீலகண்டபாடியத்தைத் தமிழில் மொழி பெயர்த்த ஈழத்து நல்லறிஞர்
(1) நாவலர் (2) அருணாசல தேசிகர்
(3) காசிவாசி செந்திநாதையர் (4) சிவபாத சுந்தரனார்
(5) கைலாசபிள்ளை

**21.** புராணங்கள், தென்னாட்டில் இந்துப்பண்பாடு மேன்மைபெற உதவிய கருவூலம் எனப் போற்றப்படுவதற்குரிய காரணம்
(1) திருக்கோயிற் பண்பாட்டு வளர்ச்சியில் பங்களித்தமை
(2) யாகக் கிரியைகளைச் சிறப்பித்தமை
(3) வான சாஸ்திரத்தில் ஏற்படுத்திய செல்வாக்கு
(4) நதிகளைப் போற்றியமை
(5) தலயாத்திரைக்கு முக்கியத்துவம் கொடுத்தமை

**22.** "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கொள்கையைக் கடைப்பிடித்த அருளாளர்
(1) சம்பந்தர் (2) அப்பர் (3) சுந்தரர்
(4) மாணிக்கவாசகர் (5) சேக்கிழார்

**23.** இந்துக் கலைக்கோட்பாட்டை உலகளாவிய ரீதியில் பெருமை பெறச் செய்த ஈழத்துப் பெரியார்
(1) சிவபாதசுந்தரனார் (2) சேர் பொன். இராமநாதன்
(3) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி (4) சுவாமி ஞானப்பிரகாசர்
(5) சேர் கந்தையா வைத்தியநாதன்

**24.** யமன் - நசிகேதன் உரையாடல் மூலமாக இறப்புக்குப் பின் உள்ள நிலை பற்றிக் கூறும் உபநிடதம்
(1) முண்டக உபநிடதம் (2) மாண்டுக்கிய உபநிடதம்
(3) கேன உபநிடதம் (4) சாந்தோக்கிய உபநிடதம்
(5) கடோபநிடதம்

**25.** மெய்கண்டசாத்திரங்களில் ஒன்றாகிய 'கொடிக்கவி' என்ற நூலின் சிறப்பம்சமாவது
(1) நான்கு வெண்பாக்களைக் கொண்டது.
(2) ஆறு வெண்பாக்களால் ஆனது.
(3) பதின்மூன்று வெண்பாக்களைக் கொண்டது.
(4) ஐம்பத்து மூன்று வெண்பாக்களைக் கொண்டது.
(5) நூறு வெண்பாக்களால் ஆனது.

**26.** 'இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை' எனப் போற்றப்படுபவர்
(1) சுஸ்ருதர் (2) ஆத்திரேயர் (3) ஆரியபட்டர்
(4) பிரமகுப்தர் (5) சார்க மகரிஷி

Hindu culture( 21/22_23_24_25 )A/L
Admin:- 0772959091

27. உலகளாவிய நிலையில் இந்துநாகரிகம் மேன்மையுறுவதற்குக் காரணம்
   (1) பண்டைக்காலந் தொட்டுச் சிறப்புற்று வந்தமை
   (2) உலகியல் விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை
   (3) அறிஞர்களின் காத்திரமான பணிகள்
   (4) சமயம், சமூகம், கலை, அறிவியல் போன்ற நாகரிகக் கூறுகளின் செல்வாக்கு
   (5) காவியங்களைக் கொண்டு விளங்குகின்றமை

28. இறைவன், உலகம், உயிர் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்பை 'அப்பிரதக்சித்தி' மூலம் விளக்கிய தத்துவவாதி
   (1) மத்துவர் (2) சங்கரர் (3) ஸ்ரீ இராமானுஜர்
   (4) பாதராயணர் (5) கௌடபாதர்

29. சைவ மரபில் 'தமிழாகமம்' எனப் போற்றப்படும் நூல்
   (1) திருவருட்பயன் (2) சிவஞானபோதம் (3) திருவாசகம்
   (4) திருமந்திரம் (5) சிவப்பிரகாசம்

30. ஆணவத்தின் குணங்களில் "தன்னை விடப்பிறர் ஒவ்வார்" என்பதைக் குறிப்பது எது?
   (1) மோகம் (2) கற்பம் (3) அஞர்
   (4) குரோதம் (5) விகற்பம்

31. பக்தி யோகத்தின் சிறப்பம்சமாக விளங்குவது யாது?
   (1) பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளமை
   (2) மூவகை யோகங்களில் ஒன்றாக விளங்குவது
   (3) பக்தி, பிரபத்தி என இருவகையில் விளங்குவது
   (4) அன்பின் வழியில் இறைவனைச் சரணடைதல்
   (5) திருத்தொண்டர்களிடத்தில் பக்தி செலுத்துதல்

32. ஜீவகோஸ்வாமி, பாலதேவர் ஆகிய சீடர்களின் ஞானகுருவாக விளங்கிய புகழ்பெற்ற வட இந்திய வைணவப் பக்திநெறியாளர்
   (1) ஸ்ரீ சைதன்யர் (2) துளசிதாசர் (3) இராமானந்தர்
   (4) கபீர்தாசர் (5) மீராபாய்

Hindu culture (2K22_23_24_25) A/L
Admin:- 0772959091

33. பிரம்மபுராணத்தையும் மனுதர்மசாத்திரத்தையும் சான்றுகாட்டி பால்யவிவாகத்தைக் கண்டனம் செய்த நவீன இந்துசமய சீர்திருத்த சிந்தனையாளர்
   (1) இராமலிங்க வள்ளலார் (2) சுவாமி விவேகானந்தர் (3) தயானந்த சரஸ்வதி
   (4) இராமகிருஷ்ண பரமஹம்சர் (5) அன்னிபெசன்ற் அம்மையார்

34. கோயிற் கட்டடங்களை சாஸ்திர ரீதியில் நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவன் யார்?
   (1) புரோகிதன் (2) சிற்பி (3) சூத்திரகிராகி
   (4) வர்த்தகி (5) ஸ்தபதி

35. முருகன் புகழ்பாடும் கந்தரனுபூதி எனும் நூலின் ஆசிரியர்
   (1) சிவஞானமுனிவர் (2) அருணகிரிநாதர் (3) கச்சியப்ப முனிவர்
   (4) சிவாக்ரயோகிகள் (5) கமலை ஞானப்பிரகாசர்

36. வேதாந்த மரபில் தத்துவ சிந்தனைகளையும் சமயநெறிமுறைகளையும் ஒன்றிணைத்துப் புதிய தத்துவக்கோட்பாடு ஒன்றினை நிறுவியவர்
   (1) சங்கரர் (2) நம்மாழ்வார் (3) ஸ்ரீ இராமானுஜர்
   (4) கௌடபாதர் (5) பாதராயணர்

37. நடராஜ வடிவம் கால்மாறி ஆடும் நிலையில் இடம்பெறும் தமிழகத்துக் கோயில்
   (1) சிதம்பரம் (2) திருவண்ணாமலை
   (3) திருவானைக்கா (4) மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்
   (5) திருவாரூர்

[பக். 5 ஐப் பார்க்க

38. யாழ்ப்பாண ஆலயங்களிலும் வெளிநாடுகளிலும் சிறப்பாகக் கதாப்பிரசங்கம் நிகழ்த்திய கலைஞர்
(1) சபாபதி நாவலர்
(2) சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(3) சிவப்பிரகாச பண்டிதர்
(4) ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
(5) சிவசங்கர பண்டிதர்

39. சைவசித்தாந்த மரபில் 'சதசத்து' என்ற பதம் குறிப்பது
(1) பதி (2) ஆன்மா (3) ஆணவம்
(4) கன்மம் (5) மாயை

40. "அஹிம்சையே மேலான தர்மம்" எனப் போற்றும் நூல்
(1) அதர்வவேதம் (2) பிரம்மசூத்திரம் (3) மகாபாரதம்
(4) சில்பரத்தினம் (5) மயமதம்

● 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றைப் பின்வரும் அட்டவணையின் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>கல்வெட்டுக்கள் | F<br>செகராசசேகர மாலை | K<br>நடுகல் | P<br>சந்தானமணி |
| B<br>மாயோன் | G<br>பிற நாட்டார் குறிப்பு | L<br>வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்வில் இணைத்தமை | Q<br>தொல்லியற் சான்றுகள் |
| C<br>உலகளாவிய நிலையில் மடங்கள் தாபித்தல் | H<br>தெய்வங்களுக்கு உரிய மலை ஏறுதல் | M<br>சூரிய வழிபாடு | R<br>வெறியாட்டு |
| D<br>சரசோதி மாலை | I<br>சேயோன் | N<br>சந்தான தீபிகை | S<br>யோகாசன முறைகள் |
| E<br>நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் | J<br>சமயப் பொறை பேணுதல் | O<br>நாணயங்கள் | T<br>ஏழைகளுக்கு இலவச மருத்துவ வசதி வழங்கல் |

Hindu culture( 2K22_23_24_25 )A/L
Admin:- 0772959091

41. சங்ககால சமய நம்பிக்கையோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, I, M, R (2) B, I, K, R (3) C, F, K, T (4) E, I, M, R (5) D, G, M, S

42. இந்து நாகரிக வரலாற்றோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, G, O, Q (2) A, F, O, Q (3) B, F, O, R (4) C, H, D, S (5) D, G, M, Q

43. இராமகிருஷ்ண மிஷனோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, G, O, R (2) B, G, M, Q (3) C, J, L, T (4) E, J, O, S (5) E, J, L, T

[பக். 6 ஐப் பார்க்க

**44.** ஈழத்தில் சோதிடக் கலை பற்றிய நூல்களின் தொகுதி யாது?

(1) A, H, M, Q (2) C, I, K, T (3) D, J, K, P (4) D, F, N, P (5) E, F, M, Q

**45.** இந்து சமய நடைமுறைகளில் காணப்படும் மருத்துவம் சார்ந்த செயல்முறைகளோடு தொடர்புடைய தொகுதி யாது?

(1) B, H, K, S (2) C, G, K, T (3) D, H, L, T (4) E, Q, M, P (5) E, H, M, S

- **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.

**46.** **ஔஷதி சூக்தம்**

(1) இருக்கு வேதத்தில் இடம்பெற்றுள்ளது.
(2) தன்வந்திரியால் இயற்றப்பட்டது.
(3) ஆயுர் வேதத்துடன் தொடர்புடையது.
(4) திரிதாதுக்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.
(5) மூலிகைகள் பற்றிய குறிப்புக்களைக் கொண்டது.

**47.** **சைவசித்தாந்தத்தில் கன்ம வினை**

(1) ஆகந்துக மலங்களில் ஒன்று
(2) மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் ஈட்டப்படுவது
(3) தன்முனைப்போடு செயற்படுவது
(4) ஆன்மாவோடு அநாதியாய்க் கூடி வந்தது
(5) பிராரத்த கன்மத்தைத் தெய்வம் என்றும் அழைப்பர்

Hinduculture( 2K22_23_24_25 )A/L
Admin:- 0772959091

**48.** **புராதன இந்து நீதிபரிபாலனம்**

(1) அரசனின் கட்டளை இராஜசாசனம் எனப்பட்டது.
(2) யாக்ஞவல்கிய ஸ்மிருதியில் பெண்களின் உரிமை பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.
(3) குற்றவாளியின் தாங்கும் சக்திக்கேற்பவே தண்டனை வழங்கப்பட்டது.
(4) பத்து அல்லது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட 'பரிஷத்' என்னும் நீதிச்சபை பற்றிக் காமாண்டக நீதிசாரம் கருத்துரைத்துள்ளது.
(5) நீதிமன்றங்களின் தீர்ப்பின்போது சாரித்திரம் என்ற மேலோர் நடைமுறையும் கவனத்திற் கொள்ளப்பட்டது.

**49.** **விஜயநகர காலம்**

(1) வீரசைவத்தின் எழுச்சிக்காலம்
(2) கோயில் நகரங்களின் காலம்
(3) தத்துவ எழுச்சிக்காலம்
(4) கோபுர எழுச்சிக்காலம்
(5) இந்துநாகரிகத்தின் இருண்ட காலம்

**50.** **கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர்**

(1) தேசத்துக் கோயில்களில் ஒன்று
(2) பாவநாசம் இதன் தீர்த்தமாகும்
(3) வேடுவர் மரபுடன் தொடர்புடையது
(4) கல்நந்தி புல் உண்ட சிறப்பு
(5) குளக்கோட்டனால் திருப்பணி செய்யப்பட்டது

❊ ❊ ❊

4681



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. இந்துநாகரிக வளர்ச்சியில் வேத இலக்கியம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

   (அ) வேதம் என்ற சொல்லின் பொருள்

   (ஆ) இருக்குவேதம் போற்றும் தெய்வங்கள்

   (இ) அக்கினி வழிபாட்டின் சிறப்பு

   (ஈ) தத்துவ சிந்தனைகள் (5 × 4 = 20 புள்ளிகள்)

2. பல்லவர் காலக் கோயிற் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்குக.

   (அ) கோயிற் கட்டடக்கலைக்கு ஆதரவளித்த மன்னர்கள்

   (ஆ) குகைக் கோயில்கள்

   (இ) இரதக் கோயில்கள்

   (ஈ) கற்றளிகள் (5 × 4 = 20 புள்ளிகள்)

3. இலங்கையில் பொலநறுவைக் காலத்தில் இந்துப் பண்பாடு வளம் பெற்றவாற்றை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

   (அ) இந்துசமய வளர்ச்சி பற்றி அறிய உதவும் சான்றாதாரங்கள் (06 புள்ளிகள்)

   (ஆ) பொலநறுவைக் காலத்தில் சிறப்புப் பெற்ற கோயில்கள் (07 புள்ளிகள்)

   (இ) பொலநறுவைக் காலத்திற்குரிய தெய்வ வடிவங்கள் (07 புள்ளிகள்)

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

[பக். 2

## பகுதி II

**4.** துவைத வேதாந்தக் கோட்பாட்டின் கருத்தமைவுகளை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) 'துவைதம்' என்ற சொல்லின் பொருள் விளக்கம் (03 புள்ளிகள்)

(ஆ) ஐவகைப் பேதங்கள் (05 புள்ளிகள்)

(இ) ஈஸ்வரன் (06 புள்ளிகள்)

(ஈ) ஆன்மா (06 புள்ளிகள்)

**5.** இந்து தத்துவக் கோட்பாடுகளுள் சைவசித்தாந்தம் மேன்மையுடன் விளங்குவதற்குக் காரணமாக அமைந்த சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

(அ) சைவசித்தாந்தம் என்பதன் சொற்பொருள் விளக்கம் (03 புள்ளிகள்)

(ஆ) சைவசித்தாந்தத்திற்குரிய பிரமாண நூல்கள் (07 புள்ளிகள்)

(இ) ஆன்மீக வாழ்வின் மேன்மைக்குரிய வழிமுறைகள் (10 புள்ளிகள்)

**6.** இந்துப் பண்பாட்டில் கல்விப் பாரம்பரியம் வளம்பெற்றவாற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) இந்துக் கல்வியின் நோக்கம்

(ஆ) புராதன கல்வி முறை

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**7.** இந்துக்களின் வாழ்வியலை நெறிப்படுத்துவதில் புருடார்த்தங்கள் பெறும் முக்கியத்துவத்தினை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**8.** இந்துக் கோயில்களில் இசைக்கலை வளம் பெற்றவாற்றை விபரிக்குக. (20 புள்ளிகள்)

❊ ❊ ❊

PAST PAPERS WIKI

(8) WwW.PastPapers.WiKi (8)

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක
## පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සුහද

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න